### த.வெ.க. ஆட்சிக்கு வந்த 60 நாளில்

# அரிசி விலை கடும் உயர்வு!

### பொதுமக்கள் அதிர்ச்சி!

*தஞ்சாவூர், ஜூலை 20 -*

மழைப்பொழிவு குறைவால் விளைச்சல் பாதிப்பால் அரிசி விலை கிடு கிடுவென உயர்ந்துள்ளது. கிலோவுக்கு ரூ.20ம், மூட்டைக்கு ரூ.600 வரையிலும் அதிகரித்துள்ளது. பற்றாக்குறையால் வருங்காலங்களில் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது.

காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை தமிழகத்தின் உணவு தேவையை பூர்த்தி செய்வதில் முக்கிய பங்காற்றுகிறது.

இங்கு விளைவிக்கப் படும் நெல், நேரடி கொள்முதல் நிலையங்கள் மூலம் விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்டு சேமிப்பு கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டு வருகிறது. இந்த நெல், லாரிகள் மற்றும் ரயில்கள் மூலம் வெளிமாவட்டங்களுக்கு அரவைக்காக கொண்டு செல்லப்பட்டு அந்த அரிசியானது பொது வினியோக திட்டத்தின் கீழ் ரேஷன் கடைகளில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் போதிய மழை இல்லாததாலும், குறுவை பாசனத்திற்கு குறிப்பிட்ட தேதியில் மேட்டூர் அணையை திறக்காததாலும் இந்த ஆண்டு குறுவை சாகுபடி பொய்த்துவிட்டது. தமிழ்நாட்டில் அரிசியின் தேவையை சமாளிக்கும் வகையில் கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களில் இருந்து சன்னரக அரிசி வாங்கப்பட்டாலும், அந்த மாநிலங்களிலும் வறட்சி மற்றும் மழை இல்லாத காரணத்தால் அரிசி விலை உயர்ந்துள்ளது. இந்த 2 மாநிலங்களிலும் நெல் உற்பத்தி குறைந்ததால் தமிழகத்திற்கு சன்ன ரக அரிசி வரத்து தற்போது குறைந்துள்ளது.

இதன் காரணமாக சன்னரக அரிசியின் விலை கிலோவிற்கு ரூ.20 வரையிலும், மூட்டைக்கு ரூ.600 வரையிலும் விலை உயர்ந்துள்ளது. அரிசி தட்டுப்பாடு காரணமாக கடந்த வாரம் ரூ.40க்கு விற்கப்பட்ட மைசூர் பொன்னி ரூ.20 உயர்ந்து ரூ.60க்கும், 1400க்கு விற்ற 26 கிலோ மூட்டை ரூ.160 விலை உயர்ந்து ரூ.1560க்கும், ரூ.65க்கு விற்கப்பட்ட கிலோ கர்நாடக பொன்னி ரூ.20 விலை உயர்ந்து ரூ.85க்கும், ரூ.1600க்கு விற்கப்பட்ட 26 கிலோ மூட்டை ரூ.610 விலை உயர்ந்து ரூ.2210க்கும் விற்கப்படு கிறது.

விலை உயர்ந்தாலும், அந்த மாநிலங்களிலும் தட்டுப்பாடு நிலவுவதால் தமிழ்நாட்டுக்கு அரிசி வருவதில் சிக்கல் ஏற்படுகிறது. தமிழகத்தில் அரிசி வரத்து குறைவாக உள்ளதால் வரும் காலங்களில் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது. இதனால் அரிசியின் விலையும் மேலும் உயரும் அபாய நிலையும் இருந்து வருகிறது.

### தமக்கென வாழாமல் தமிழுக்கென வாழ்ந்த

## மறைமலையடிகளாரின் பிறந்தநாளை கழக கலை - இலக்கிய பகுத்தறிவுப் பேரவை கொண்டாடியிருப்பது சிறப்புக்குரியது!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பாராட்டு – வாழ்த்து!

சென்னை, ஜூலை 20 -

மறைமலையடிகளாரின் 150வது பிறந்த நாளையொட்டி (18-07-2026), கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு

""வாழ்த்தாத நாளில்லை வையகம்
மறைமலையடிகள் மறையாத் திருப்பெயர்
வாழ்த்தாத நாளில்லை வையகம்!
பொழுதெல்லாம் தமிழுக் குழைத்த தலைவனை
வாழ்த்தாத நாளில்லை வையகம்" - பாவேந்தர் பாரதிதாசன்!

"தமிழ் நன்மங்கையின் அழகிய நன்மேனியில் அம்மைத் தழும்புபோல் வடசொற்களைப் புகுத்தாதீர்கள். தனித்தமிழுக்குப் பாடுபடுங்கள்" என வலியுறுத்தி, தமக்கென வாழாமல் தமிழுக்கென வாழ்ந்த மறைமலையடிகளின் 150-ஆவது பிறந்தநாள் நிறைவுப் பெருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடியிருக்கிறது கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை! மறைமலையடிகளாரின் வாழ்வையும் பணியையும் இன்றைய தலைமுறையினர் கட்டாயம் அறிந்துகொள்ள வேண்டும்.

வேதாசலம் என்ற தன் பெயரையே மாற்றிக்கொண்டு தமிழ் மறுமலர்ச்சிக்காக உழைத்தவர் அடிகளார். "இந்தி பொதுமொழியா?" நூல் உள்ளிட்ட தம் பங்களிப்புகளால் இந்தித் திணிப்பை எதிர்த்தார்.

"தமிழர் அனைவரும் பண்டுபோல் தமக்குந் தம் இல்லங்களுக்கும் தம்மூர்களுக்கும் பிறவற்றிற்கு மெல்லாந் தூய தமிழ்ப் பெயர்களையே அமைத்தல் வேண்டும்" என்ற மறைமலையடிகளின் வேண்டுகோளினை ஏற்று நம் பிள்ளைகளுக்குத் தமிழ்ப்பெயர்களைச் சூட்டுவோம்! வாழ்க மறைமலையடிகள் புகழ்!"

இவ்வாறு தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான 'திராவிட மாடல்' ஆட்சியில்

# 2021-26 வரை நெல் கொள்முதல் 1,84,45,545 மெட்ரிக் டன்!

# வேளாண்மை செழிக்க தி.மு.க.வின் திட்டங்களை அரசு தொடர வேண்டும்!

### விவசாயப் பெருங்குடி மக்கள் வலியுறுத்தல்!

திருவாரூர், ஜூலை 20 -

தமிழ் நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வேளாண்மைதான் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதும் , இரண்டாவது மூன்றாவது பிரிவான தொழில் வளர்ச்சிக்கும்கூட வேளாண்மையே உறுதுணையாக விளங்குகிறது என்பதை "ராயல் என் பீல்ட் நிறுவானத்திடம் கொஞ்சம் போன் கேட்டு கேட்டுக்கிறீங்களா? "என்பதைப் போல் அல்லாமல், விவசாயத்தின் அடிப்படை அரிச்சுவடி தெரிந்தாலே புரியும்.

கடந்த 2020-26 ஆட்சியின் போது தன்னுடைய கடைசி திரைப்படத்தில் நடித்ததுக்கொண்டிருந்த இன்றைய ஆட்சியாளர்கள் , ஆட்சிக்கு வந்ததும் அந்த திரைப்படத்தை வெளியிடத்தான் ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கோடிகளில் முதலீடு செய்யப்பட்ட அந்த திரைப்படத்தின் தயாரிப்பாளருக்கு பதவி! ஆனால் உலகத்திற்கே உணவளிக்கும் விவசாயிகளுக்கு துரோகங்கள் மட்டுமே பரிசாக !!

தேர்தல் நேரத்தில் ஆட்சிக்கு வர கொடுத்திருந்த தங்களது தேர்தல் வாக்குறுதிகள் காற்றில் பறந்து கொண்டிருக்கின்றன. கடந்த தி.மு.க. ஆட்சி மீது எங்கே குறைகாணலாம்? என ஒரு படையையே [த.வெ.க. ஐடி விங்க்] பணிக்கு அமர்த்தி தேடும் ஆட்சியாளர்கள் ஒவ்வொரு முறையும் தி.மு.க. ஆட்சிக்காலத்தில் விவசாயம் செழித்த திட்டங்களை தெரிந்தே மறைத்து விடுகின்றனர்.

கடந்த 2021-26 தி.மு.க. ஆட்சியில்கொண்டுவரப்பட்டதிட்டங்களை அப்படியே "காப்பி பேஸ்ட்" செய்து வரும் பட்ஜெட்டில் அறிவித்து அதன்படி செயல்படுத்தினாலே இவர்களுக்கு விவசாயக்கல்லூரியில் படித்த அனுபவம் வந்துவிடும்!

2021-26 தி.மு.க. ஆட்சியில் விவசாய பொற்கால திட்டங்களில் இருந்து ஒரு சில வேளாண்துறை அமைச்சரின் பார்வைக்கு இதோ ...

2021 முதல் 2026 வரையிலான தி.மு.க. ஆட்சியில் வேளாண் துறைக்கு நிதி ஒதுக்கீடு ரூ.34,220 கோடியிலிருந்து ரூ.47,248 கோடியாகும். முதன்முறையாக உழவுக்கு தலைவணங்கும் "தனி வேளாண் பட்ஜெட்" அறிமுகம். ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட இலவச மின் இணைப்புகள், மேட்டூர் அணையில் உரிய நேரத்தில் தண்ணீர் திறப்பு மற்றும் 55,750 ஏக்கர் தரிசு நிலங்கள் மீட்டெடுப்பு .

நிதி ஒதுக்கீட்டைப்பொருத்தவரை கடந்த 2021-26, 5 ஆண்டுகளில் விவசாயத்திற்காக ரூ.1,94,000 கோடிக்கும் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1.5 லட்சத்துக்கும் அதிகமான விவசாயிகளுக்கு புதிய இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டன. தி.மு.க.வின் வரலாற்று சாதனையான ஒவ்வொருஆண்டும் ஜீன் 12 மேட்டூர் அணை திறக்கப்பட்டதோடு, 10,000-க்கும் மேற்பட்ட சிறு பாசனக் குளங்கள், கால்வாய்கள் தூர்வாரப்பட்டன.

பாரம்பரிய நெல் ரகங்களை மீட்டெடுக்க நெல் ஜெயராமன் இயக்கம் செயல்படுத்தப்பட்டு விதைகள் விநியோகிக்கப்பட்டன. கைவிடப்பட்ட உழவர் சந்தைகள் புனரமைக்கப்பட்டு மீண்டும் செயல்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டன.

2021-2026 திமுக ஆட்சியில் முதலமைச்சரின் மண்ணுயிர் காப்போம் திட்டம் (CM-MK-MKS), மண் வளத்தை மேம்படுத்தவும், ரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைக்கவும் ரூ.206 கோடி வரையிலான நிதி ஒதுக்கீட்டில் திட்டம்.

மாநிலம் முழுவதும் அனைத்து சிற்றூர்களையும் தன்னிறைவு பெறச் செய்யும் நோக்கில், தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்ற கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்.ஊட்டச்சத்து மிக்க சிறுதானியங்களின் சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்க தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்.

விவசாயிகளின் பணிச்சுமையைக் குறைக்கவும், நவீனமயமாக்கலை ஊக்குவிக்கவும் சிறிய நெல் நடவு இயந்திரங்கள், விசைக் களையெடுக்கும் கருவிகள் போன்றவற்றுக்கு மானியங்கள் வழங்கப்பட வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டம்.

இயற்கை வேளாண்மையில் சிறந்து விளங்கி, அதனைப் பிற விவசாயிகளுக்கும் ஊக்குவிக்கும் விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் குடியரசு தினத்தன்று நம்மாழ்வார் விருது.

சொன்னபடி கூட்டுறவு பயிர்க் கடன் தள்ளுபடி மற்றும் சிறப்புக் கடன்கள் மேலும், வறட்சியான மாவட்டங்களில் பயிர் சாகுபடியை அதிகரிக்கச் சிறப்புத் தொகுப்புத் திட்டங்கள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியைப் பெருக்க பிரத்யேக இயக்கங்கள் .

விவசாயிகள் சிரமமின்றி நெல் விற்க ஏதுவாக, கூடுதலான நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, கூடுதலாக நேரமும் நீட்டிக்கப்பட்டது.

கொள்முதல் செய்யப்படும் நெல் வீணாகாமல் பாதுகாக்க நவீன சேமிப்பு கிடங்குகள் கட்டும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன

தென்னை விவசாயத்தை ஊக்குவிக்க 53 லட்சம் தென்னங்கன்றுகள். 21 லட்சம் பழச்செடிச் தொகுப்புகள் பயனாளிகளுக்கு விநியோகம். நெல் ஜெயராமன் மரபுசார் நெல் ரகங்கள் பாதுகாப்பு இயக்கத்தில் 900 மெட்ரிக் டன் பாரம்பரிய நெல் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு 70,000 விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

நெல் சாகுபடிப் பரப்பை அதிகரிக்க குறுவை சிறப்புத் தொகுப்பு திட்டம் ரூ.5.482 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு 19.51 லட்சம் விவசாயிகள் பயனடைந்தனர்.

2021-22 முதல் 2024-25 ஆம் ஆண்டு வரை, இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோராக்குதல் திட்டம் மூலம் 456 பட்டதாரி இளைஞர்கள் வேளாண் சார்ந்த தொழில் தொடங்க ஊக்குவிக்கப்பட்டு, அவர்களுக்கு ரூ.4.56 கோடி மானியம் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் 2023-24-ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், 12.84 லட்சம் விவசாயிகள் ரூ.178 கோடி நிதியில் பயனடைந்துள்ளனர். 20 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் சிறுதானியப் பயிர்கள் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

தேசிய அளவில், தமிழ்நாடு கேழ்வரகு உற்பத்தித் திறனில் முதல் இடம், கேழ்வரகு உற்பத்தியில் இரண்டாம் இடம், குறுதானியங்கள் உற்பத்தியில் ஐந்தாம் இடம் பெற்று சாதனை படைத்தது கம்பு சாகுபடிப் பரப்பு 113 லட்சம் ஏக்கரிலிருந்து 133 லட்சம் ஏக்கராக அதிகரித்தது.

வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் மொத்தம் 77,499 வேளாண் இயந்திரங்கள், கருவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. 1,320 வேளாண் இயந்திர வாடகை மையங்களும் நிறுவப்பட்டன. இதற்கென மானியமாக மொத்தம் ரூ.783 கோடி வழங்கப்பட்டது.

4,150 சூரிய சக்தி பம்புசெட்டுகள் நிறுவப்பட்டு ரூ.83 கோடி மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும் 5,954 புதிய மின்மோட்டார் பம்பு செட்டுகளும் ரூ.7.67 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.கடந்த ஐந்து ஆண்டுகளில், சுமார் 2 லட்சம் புதிய இலவச மின்சார இணைப்புகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

கடந்த 5 ஆண்டுகளில், தோட்டக்கலைத் துறை மூலம் 68 லட்சம் பனை விதைகள், 1 லட்சத்து 28 ஆயிரம் பனங்கன்றுகள் விநியோகம், 354 பனை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் கூடங்கள் ஆகியவை செயல்படுத்தப்பட்டன.

சன்ன ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.156/-ம், சாதாரண ரகங்களுக்கு ரூ.131/-ம் ஊக்கத்தொகையாக வழங்கி அவற்றின் கொள்முதல் விலை முறையே ரூ.2,545 மற்றும் ரூ.2,500 ஆக உயர்த்தப்பட்டது. 5 ஆண்டுகளில் 186 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு ரூ.2,118 கோடி ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் 5 ஆண்டுகளில் 184 லட்சம் ஏக்கர் பரப்பு, சுமார் 80 லட்சம் விவசாயிகளால் காப்பீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தில், மகசூல் இழப்பிற்கு 38 லட்சம் விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் ரூ.6,063கோடிவழங்கப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில், இயற்கைப் பேரிடர்களால் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் 16.20 லட்சம் ஹெக்டேரில் ஏற்பட்ட பயிர் சேதத்திற்கு ரூ.2.045 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டது. இதனால் 25.36 லட்சம் விவசாயிகள் பயனடைந்தனர்.

நாகப்பட்டினம். சிவகங்கை, கரூர் மாவட்டங்களில் மூன்று அரசு வேளாண் கல்லூரிகள் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒரு தோட்டக்கலைக்கல்லூரி புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில், 101 புதிய பயிர் ரகங்கள், 21 வேளாண் நுட்பங்கள், 16 புதிய பண்ணைக் கருவிகள். வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு 2021-ஆம் ஆண்டில் 74 சதவீதமாக இருந்த இளங்கலை மொத்த மாணவர் சேர்க்கை 2025-ஆம் ஆண்டில் 97 சதவீதமாக உயர்ந்தது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் இது வரை 83 இலட்சத்து 64 ஆயிரம் விவசாயிகளுக்கு 69.457 கோடி ரூபாய் பயிர்க்கடனும், 16 இலட்சத்து 9 ஆயிரம் நபர்களுக்கு 8,938 கோடி ரூபாய் கால்நடை வளர்ப்பு. மீன் வளர்ப்பு உள்ளிட்ட வேளாண் சார்ந்த நடவடிக்கைகளுக்கான கடன் .உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் 6.47 இலட்சம் பயனாளிகளுக்கு கல்வி, திருமணம், விபத்து நிவாரணம், மரணம் போன்றவற்றிற்கு உதவித்தொகையாக ரூ. 819 கோடி வழங்கப்பட்டது.

2011-12 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024-25 ஆம் ஆண்டில் வேளாண்மையில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பு 9.97 சதவீதம் உயர்ந்தது. 2011-12ஆம் ஆண்டில், 53,75,639 லட்சம் ரூபாயாக இருந்த மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பு, 2024-25 ஆம் ஆண்டில், 59,11,708 லட்சம் ரூபாயாக உயர்ந்தது. 2021-22 ஆம் ஆண்டில், வரவு செலவுத்திட்டத்தில் ரூ.34,220 கோடியாக இருந்த நிதி ஒதுக்கீடு, 2025-26 ஆம் ஆண்டில், ரூ.45,661 கோடியாக அதிகரிக்கப்பட்டது.

2026-27 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில், வேளாண்மை உழவர்நலத் துறைக்கு 47,248.24 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த திட்டங்களின் பலன்களால் தான் முந்தைய 2016-21 காலகட்டத்தில் 99 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த நெல் கொள்முதல், 2021-26 காலகட்டத்தில் 215 இலட்சம் மெட்ரிக் டன்னாக வரலாற்றுச் சாதனை அளவை எட்டியது.

ஆனால் எதை கேட்டாலும் மக்கள் மன்றத்தில் "வெள்ளை அறிக்கையை" மட்டுமே தனது மக்களை திசை திருப்பும் வித்தைகள் அறிந்த இந்த ஆட்சியாளர்கள், இப்படிப்பட்ட வேளாண் திட்டங்களை வசதியாக மறைத்து கடந்து செல்கிறார்கள்.

ஒவ்வொரு நிகழ்வையும் ரீல்ஸ் எடுத்துப்போடும் நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்களும், அமைச்சர் பெருமக்களும் கடந்த திமுக ஆட்சியில் எப்படி குடி நீர் பிரச்சனைகள், விவசாய பிரச்சினைகள் ஏதுமின்றி மக்கள் நிம்மதியாக வாழ்ந்தார்கள் என்பதை கொஞ்சமாவது பார்க்க வேண்டும் என்பதுதான் பொதுமக்களின் கோரிக்கை.

தி.மு.க. ஆட்சியில் செழித்த விவசாயம், தற்போது ஆட்சியை அமைக்கவே தட்டு தடுமாறி, சட்டமன்ற உறுப்பினார்களையும் பிற கட்சிநிர்வாகிகளையும் விலைக்கு வாங்குவதற்கே நேரத்தை செலவிட்டு, எதை? எப்படி? எங்கே செய்வது? என்பதை கற்றுக்கொள்ளாமல், கத்துக்குட்டிக்களாய் ரீல்ஸ் மோகத்தில் விளம்பர ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிறது.

தற்போது "விஜய் ரசிகர்மன்றத்தின்" மக்கள் இயக்கத்திலிருந்து வந்திருக்கும் இந்த அரசின் வேளாண் துறை அமைச்சர் அவர்கள், திமுகவின் கடந்த கால சாதனைகளை பார்த்து, அவைகளில் இருந்து, உங்களுக்கு தேவையான வேளாண் நிதிநிலை அறிக்கையையும் , திட்டங்களையும் தமிழ்நாட்டு கொடுத்தாலே மக்கள் வாழ்த்துவார்கள் என்பதை உணரவேண்டும்.

அதனை தவிர்த்து விவசாயத்தை அழித்து, கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு டெல்டாவை தாரை வார்த்து விடலாம் என்று எண்ணினால், விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களும் மிகப்பெரிய போராட்ட புரட்சியை செய்யவும் தயங்கமாட்டார்கள் என்பதுதான் விவசாயம் சார்ந்த மக்களின் எண்ணமாக உள்ளது .

**பி.ஜாகீர் உசேன்**
திருவாரூர்



விளாத்திகுளம் வட்டம் குளத்தூர் இந்து நாடார் உறவின்முறை சங்கத்திற்கு பாத்தியப்பட்ட அன்னை பத்திரகாளியம்மன் திருக்கோவில் ஆனி பெருந்திருவிழா மற்றும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, குளத்தூர் காமராஜர் ஸ்போர்ட்ஸ் அகாடமி நடத்தும் 62ம் ஆண்டு தென்னிந்திய அளவிலான மாபெரும் பெண்களுக்கான மின்னொளி கபாடி போட்டியினை முன்னாள் அமைச்சர், திருச்செந்தூர் சட்டமன்ற உறுப்பினர் அனிதா ராதாகிருஷ்ணன், கோவி. செழியன், ஜீ. வி. மார்க்கண்டேயன் ஆகியோர் இணைந்து துவக்கி வைத்தனர்.நிகழ்வில் மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் எஸ். ஆர். எஸ்.உமரிசங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், ஒன்றிய செயலாளர்கள் சின்னமாரிமுத்து, ராமசுப்பு, அன்புராஜன், இம்மானுவேல், விளாத்திகுளம் பேரூர் கழகச் செயலாளர் வேலுச்சாமி, பொதுக்குழு உறுப்பினர் ராஜாக்கண்ணு, ஒன்றிய துணைச் செயலாளர் ராஜபாண்டி, விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.